சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திருமதி. இரா. சத்யதாரா, எம்.ஏ., எம்.எல்.,

அமர்வு வழக்கு எண் 88 /2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 4 (LW – 5) | நாள் | 24.07.2026 |
| பெயர் | பிரியங்கா | வயது | 26 |
| தந்தை பெயர் | கலியபெருமாள் | ஊர் | கொள்ளிடம் |

(குற்றம் சாட்டப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு திரு. T. ரவிசங்கர், இருக்கை எழுத்தர் நிலை – 1 என்பவரால் சத்யபிரமாணம் செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 17.03.2025 மயிலாடுதுறை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது காலை சுமார் 9.00 மணியளவில் குற்றம் சட்டம் ஒழுங்கு சம்பந்தமாக முதல்நிலைகாவலர் 743 சதீஷ்குமார் மற்றும் இரண்டாம் நிலை காவலர் 219 ராஜேஷ் ஆகியோருடன் மயிலாடுதுறை புதிய பேருந்து நிலையத்தில் ரோந்து மேற்கொண்டிருந்தபோது அப்போது அங்கு பொதுமக்களை அச்சுறுத்தும் விதமாக கத்தியை வைத்துக்கொண்டு பணம் கேட்டு பிரச்சனை செய்தவரை விசாரித்தபோது பெயர் ராஜா என்கிற ஜான்பீட்டர், த/பெ. குப்புசாமி, கலைஞர்காலனி, மயிலாடுதுறை என்று தெரிந்து கொண்டேன். அவரை பலமுறை எச்சரித்தும் மீண்டும் பொதுமக்களிடம் கத்தியை வைத்துக்கொண்டு அச்சுறுத்தும் விதமாக நடந்து கொண்டதால் எதிரியை 09.10 மணிக்கு கைது செய்தும் கைது செய்த விவரத்தை உறவினர்களுக்கு தெரிவித்தும் பொதுமக்கள் சாட்சிக்கு முன்வராததால் என்னுடன் இருந்த முதல் நிலை காவலர் 743 சதீஷ் குமார் மற்றும் இரண்டாம் நிலை காவலர் 290 ராஜேஷ் போலிசார் சாட்சிகள் முன்னிலையில் எதிரியை எவ்வித அச்சுறுத்தலுமில்லாமல் நாங்கள் வைத்திருந்த மடிக்கணினியில் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அதசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிறகு 10.15 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி வைத்திருந்த இவ்வழக்கின் தடயமான கத்தியின் மொத்த நீளம் 32 செமீ அதில் வெட்டும் இரும்பு பாகம் சுமார் 20 செமீ, பித்தளை பூண் சுமார் 4 செமீ இரும்பு கைப்பிடி சுமார் 8 செமீ கொண்ட கத்தியை மகசரில் கைப்பற்றினேன். கைப்பற்றிய தடயப்பொருளை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். அந்த

24/07/26

படிவம் 91 **அதசாஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி மற்றும் கைப்பற்றிய தடயத்துடன் மயிலாடுதுறை காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து மயிலாடுதுறை காவல் நிலைய குற்ற எண். 198/2025, ச/பி. 296(b) of BNS r/w 25(1-A) of Arms Actன் படி எதிரி மீது வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். நான் தயார் செய்த முதல் தகவல் அறிக்கை **அதசாஆ 4** ஆக குறியீடு செய்யப்டுகிறது. பிறகு சுமார் 12.00 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் அரவிந்தன், விமல் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். நான் தயார் செய்த மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் **அதசாஆ 5 மற்றும் 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் தக்க படிவங்களுடன் குற்றவிய நீதிமன்ற நடுவர் எண். 1 நீதிமன்றத்தில் தக்க வழிக்காவல் மூலம் ஆஜர் செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பினேன். பிறகு 22.03.2025 அன்று எதிரி மீது ச/பி. 296(b) of BNS r/w 25(1-A) of Arms Actன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

**குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு புலன்கொள் வழக்கு என்றால் சரிதான். காவல் நிலையத்தில் ஆய்வாளர் நிலையபொறுப்பு அதிகாரி என்றால் சரிதான். உதவி ஆய்வாளர்தான் நிலைய பொறுப்பு அதிகாரி என்றால் சரியல்ல. புதிய பேருந்து நிலையம் டாஸ்மாக் அருகில் எதிரியை கைது செய்தேன் என்றால் சரிதான். கைது செய்த இடம் டாஸ்மாக் எதிரில் என்றால் சரியல்ல. கைது செய்த இடம் ஆவின் பாலகம் என்றால் சரியல்ல. ஆவின் பாலகத்திற்கும் பயணிகள் அமரும் இடத்திற்கும் 50 மீட்டர் இடைவெளி என்றால் சரிதான். 50 மீட்டர் இடைவெளி இல்லை 10 அடி இடைவெளிதான் என்றால் சரியல்ல. ஆவின் பாலகத்திற்கும் பயணிகள் அமரும் இடத்திற்கும் இடையில் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் இல்லை. செட்டிநாடு மெஸ் அருகில் 10 மீட்டர் இடைவெளியில் வடகிழக்கு பார்த்தார் போல் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் சரியல்ல. சம்பவ நடந்த காலத்தில் விவசாயத்திற்கு பயன்படுத்தும் ஆயுதங்கள் என்று அரசிடமிருந்து எந்த ஆணையும் வரவில்லை என்றால் சரிதான். எதிரியை குற்றவியல் நீதித்துறை நடுவர் முன் ஆஜர் செய்யவில்லை என்றால் சரியல்ல. சேவைக்காக பயன்படுத்தக்கூடிய ஆயுதத்தை நான் பறிமுதல் செய்து எதிரியை கைது செய்திருந்தால் குற்றவியல் நடுவரிடம் எதிரியை ஆஜர் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. அதுபோல் எதிரியிடமிருந்து எந்தவித ஆயுதத்தையும் கைப்பற்றாததால்தான் குற்றவியல் நடுவர் முன்பு ஆஜர் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கைப்பற்றியுள்ள சான்று பொருள் விவசாயத்திற்காக பயன்படுத்தகூடிய ஆயுதம் என்றால் சரியல்ல. குற்றத்திற்காக பயன்படுத்திய ஆயுதம் என்றால் நான் குற்றவியல் நடுவர்

24/07/26

முன்பு ஆஜர் படுத்தியிருப்பேன் என்றும் விவசாயத்திற்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதம் என்பதால் அவ்வாறு ஆஜர் செய்யவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் எச்சரிக்கை செய்ததாக போட்டுள்ள வரிகள் சட்டத்திற்கு புறம்பாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எதிரியை கைது செய்திருந்தால் சிசிடிவி பதிவுகளை தாக்கல் செய்திருப்பேன் என்றும் வேறு ஒரு இடத்தில் கைது செய்து வழக்கை தாக்கல் செய்ததால்தான் சிசிடிவி பதிவுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சேவைக்காக பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தை கைப்பற்றியிருந்தால் மாவட்ட குற்றவியல் நடுவரிடம் ஒப்படைத்திருப்பேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு முன் அனுமதி எதுவும் நான் பெறவில்லை என்றால் சரிதான். அசா 1 தனது சாட்சியத்தில் தான் மூங்கில்தோட்டத்தில் வசிக்கிறேன் என்று சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அசா 2 மற்றும் அசா 3 ஆகியோர் எங்கள் காவல் நிலைய அதிகாரிகளை பயன்படுத்தி உயரதிகாரியின் ஆணைக்கிணங்க சட்டவிதிகளுக்கு அப்பாற்பட்டு எதிரியை உட்படுத்தி அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புகார்தாரர் மற்றும் புலன் விசாரணை அதிகாரியும் நான் தான். ஒரு வழக்கில் புகார்தாரரும் புலன் விசாரணை அதிகாரியும் ஒருவராக இருக்க கூடாது என்று தெரியுமா என்றால் தெரியாது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து பின்னிட்டு எதிரியை கைது செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கைப்பற்றியுள்ள சான்று பொருள் பொது சந்தையில் கிடைக்கும் என்றால் சரிதான். மேலதிகாரிகளின் ஆணைக்கிணங்க எதிரிக்கு எதிராக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தவறான புகாரின் அடிப்படையில் பொய்யான் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து எதிரிக்கு எதிராக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

24/07/26

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை